# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
# ARNI, TIRUVANNAMALAI DISTRICT.
## S.C No.126/2013

| | |
|---|---|
| **Deposition of Witness for** | **: PW4** |
| **Name** | **: Tr. Dhanasekar** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 14.11.2019**

**முதல் விசாரணை -**

நான் குன்னத்தூர் கிராமத்தில் வசிக்கிறேன். மேஸ்திரி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். இவ்வழக்கில் இறந்து போன நாராயணசாமியை தெரியும். நாராயணசாமியும் சுந்தரமூர்த்தியும் அண்ணன் தம்பிகள். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இரவு 7.30, 8.00 மணிக்கு நான், தேவன், விஜயகுமார் ஆகிய மூவரும் தெருவில் நின்று பேசிக் கொண்டிருந்தோம். இறந்து போன நாராயணசாமியின் மனைவிக்கும் சுந்தரமூர்த்தியின் மனைவிக்கும் வாய் தகராறு நடந்தது. எதிரி நாராயணசாமியிடம் எப்போது பார்த்தாலும் குடித்து விட்டு சண்டை போடுகிறாய் என்று கூறி தகராறு செய்தார். நாங்கள் போய் பார்த்த போது நாராயணசாமியின் தலையின் வலது பக்கத்தில்

ரத்தம் வந்துக் கொண்டிருந்தது. சுந்தரமூர்த்தி அடித்ததாகச் சொன்னார்கள். நாங்கள் நாராயணசாமியை சிகிச்சைக்காக செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு முடியாது என்று சொன்னதால் அங்கிருந்து செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பாதி வழியிலேயே அவர் இறந்துவிட்டார். அவரின் உடலை நாங்கள் வீட்டிற்கு எடுத்து வந்தோம். உதவி ஆய்வாளர் வந்தார், பின்னர் செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அவரின் உடலை எடுத்துச் சென்றோம். இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் நடந்தவற்றைச் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை-** இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Ganesan,
Additional Sessions Judge,
Arani.